Public Service Announcement

உங்கள் வாக்களிப்பு அனுபவத்தைப் பற்றிக் கூறுங்கள்

வாகனின் 2026ஆம் ஆண்டுக்கான நகராட்சித் தேர்தலில் நீங்கள் வாக்களித்திருந்தால், நவம்பர் 16ஆம் தேதிக்குள் ஆன்லைன் சர்வேயில் பங்கேற்கவும்.

வாகன், ஒன் (அக். 30, 2026) –வாகனின் 2026ஆம் ஆண்டுக்கான நகராட்சித் தேர்தலில் நீங்கள் வாக்களித்தீர்களா? உங்களுக்குத் தேவையான தகவல்களை எவ்வாறு பெற்றீர்கள்? வாக்களிக்கும் நடைமுறை எளிதாகவும் அனைவரும் அணுகக்கூடிய வகையிலும் இருந்ததா?

உங்கள் கருத்துகளைப் பகிர்ந்துகொள்ள, நவம்பர் 16, திங்கட்கிழமைக்குள் எங்களின் சுருக்கமான ஆன்லைன் சர்வேயைப் பூர்த்திச் செய்யுங்கள்.

உங்கள் கருத்துகள், எதிர்காலத் தேர்தல்களை மேம்படுத்தவும் அவற்றைத் திட்டமிடவும் எங்களுக்கு உதவும். வாகனில் வாக்களிப்பு அனுபவத்தை மேம்படுத்துவதற்கு தங்களின் பங்களிப்பை வழங்கியதற்குப் நன்றி.

மேலும் அறிய, vaughan.ca/**elections** என்ற இணையதளத்தைப் பார்வையிடவும்.

உடனுக்குடன் வெளியாகும் புதுப்பிப்புகளைப் பெற, Vaughan News-க்குச் சந்தா செலுத்தி, X, Facebook, Instagram மற்றும் LinkedIn ஆகிய அதிகாரபூர்வ நிறுவனச் சமூக ஊடகப் பக்கங்களைப் பின்தொடரவும்.

-30-

வாகனைப் பற்றி: வாகன் நகரம் கனடாவின் மிகவும் வேகமாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றாகும், இதன் மக்கள் தொகை 344,412 ஆக உள்ளது. 1991-இல் இணைக்கப்பட்ட வாகன், கான்கார்ட், க்ளீன்பர்க், மேப்பிள், தோர்ன்ஹில் மற்றும் வுட்பிரிட்ஜ் சமூகங்களை உள்ளடக்கியது. இந்தக் கலாச்சார ரீதியாகப் பன்முகத்தன்மை கொண்ட நகரம், யார்க் பிராந்தியம் மற்றும் கிரேட்டர் டொராண்டோ பகுதியின் மையத்தில் அமைந்துள்ளது.

ஊடக தொடர்புக்கு: வாகன் நகரம்

Public Service Announcement

தொடர்புகள், சந்தைப்படுத்தல் மற்றும் ஈடுபாட்டுத் துறை
905-832-2281 | corpcomm@vaughan.ca